# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
# Tamil Education Service Switzerland
## மெய்வல்லுனர் போட்டி 2021

தமிழ்க் கல்விச்சேவையின் தமிழ்ப்பள்ளிகளில் கல்விகற்கின்ற மாணவர்கள் அனைத்து வயதுப்பிரிவுகளிலும், தமிழ்ப்பள்ளிகளில் கல்விகற்காத மாணவர்கள் 13, 15, 17, 19 வயதுப் பிரிவுகளிலும் மெய்வல்லுனர்போட்டிகளில் பங்குபற்றலாம்.

மெய்வல்லுனர்போட்டிகள் சில மாநிலங்களை ஒன்றிணைத்த வகையில் ஆறு வலயங்களாக நடைபெறவுள்ளன (வலயங்களின் விபரம் கீழே தரப்பெற்றுள்ளது).

விண்ணப்பிக்கும் மாணவர்கள் தமது வயதுப் பிரிவில் அனைத்து விளையாட்டுக்களிலும் பங்குபற்றலாம்.

பள்ளிமாணவர்கள் போட்டிக்கட்டணத்தினை வகுப்பாசிரியரிடம் அல்லது பள்ளிமுதல்வரிடமும், பள்ளியில் கல்வி கற்காத மாணவர்கள் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினையும், போட்டிக்கட்டணத்தினை கல்விச்சேவை தபாற்கணக்கிற்கு செலுத்திய பத்திரத்தின் பிரதியினையும் கல்விச்சேவைப் பணியகத்திற்கு அனுப்பிவைப்பதன் மூலம் போட்டியில் பங்குபற்ற முடியும்.

**கடந்த ஆண்டு மெய்வல்லுனர்போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்து, பணமும் செலுத்தியவர்கள் இவ்வாண்டு பணம் செலுத்தத் தேவையில்லை.**

தமிழ்ப்பள்ளியில் கல்விகற்காத மாணவர்கள் வதிவிட அனுமதிப் பத்திரத்தின் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

போட்டிக்கான அனுமதிக் கட்டணம்: **CHF 15.00**

விண்ணப்ப முடிவுத் திகதி: **27.02.2021 சனிக்கிழமை**

பிந்திய விண்ணப்பக்கட்டணம்: **CHF 20.00** **(பிந்திய விண்ணப்பங்கள் 31.03.2021 ஆம் நாள்வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பெறும்)**

**மெய்வல்லுனர் போட்டி நடைபெறவுள்ள வலயங்களின் விபரம்:**

| **நாள்** | **நகரம்** | **பங்குபற்றும் மாநிலங்கள்** |
|---|---|---|
| | | பேர்ண், சொலத்துாண், பிறிபேர்க் |
| | | லுட்சேர்ன், சுக், பாசல், யூரா, ஆர்கோ, பாசல் லான்ட் |
| | | ரிசினோ, ஊரி, சுவைட்ஸ் |
| | | வோ, வலே, ஜெனீவா, நொசத்தல் |
| | | சூரிச், சப்கவுசன் |
| | | செங்காளன், துர்க்காவ், கிறபுண்டன், கிளாறுஸ், சுவைட்ஸ் |

* விளையாட்டு மைதானம் உறுதிப்படுத்தப்பெற்றதும், நடைபெறவுள்ள நாளும், நகரமும் அறியத்தரப்பெறும்.

**மாணவர்கள் தமிழ்ப்பள்ளிகளில் இணைந்துகொள்வதன் மூலம் சகல வயதுப்பிரிவு விளையாட்டுப்போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம். புதிய மாணவர் விண்ணப்பப்படிவங்களை www.tamilschool.ch எனும் இணையதளத்திலும், தமிழ்ப்பள்ளி முதல்வர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.**

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

## தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கிடையிலான
## சுவட்டுமைதான மெய்வல்லுனர் போட்டி - 2021

| வயதுப்பிரிவு | போட்டிகள் | | |
|---|---|---|---|
| 5 வயது ஆண் / பெண் **(01.01.2016 – 31.12.2016)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (60 g) | பந்து பொறுக்குதல் |
| 6 வயது ஆண் / பெண் **(01.01.2015 - 31.12.2015)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (60 g) | பந்து பொறுக்குதல் |
| 7 வயது ஆண் / பெண் **(01.01.2014 - 31.12.2014)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 8 வயது ஆண் / பெண் **(01.01.2013 - 31.12.2013)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 9 வயது ஆண் / பெண் **(01.01.2012 - 31.12.2012)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 10 வயது ஆண் / பெண் **(01.01.2011 - 31.12.2011)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 11 வயது ஆண் / பெண் **(01.01.2010 - 31.12.2010)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 12 வயது ஆண் / பெண் **(01.01.2009 - 31.12.2009)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 13 வயது ஆண் / பெண் **(01.01.2008 - 31.12.2008)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 14 வயது ஆண் / பெண் **(01.01.2007 - 31.12.2007)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 15 வயது ஆண் / பெண் **(01.01.2006 - 31.12.2006)** | 60 மீற்றர் ஓட்டம் | பந்தெறிதல் (200 g) | நீளம் பாய்தல் |
| 17 வயது ஆண் / பெண் **(01.01.2004 - 31.12.2005)** | 100 மீற்றர் ஓட்டம் | குண்டெறிதல் | நீளம் பாய்தல் |
| 19 வயது ஆண் / பெண் **(01.01.2002 - 31.12.2003)** | 100 மீற்றர் ஓட்டம் | குண்டெறிதல் | நீளம் பாய்தல் |

7-15 வயதுப்பிரிவுகளுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் **UBS Kids Cup** விதிமுறைகளின் அடிப்படையில் நடைபெறும். இப்போட்டிகளில் வெற்றிபெறுபவர்கள் மாநில ரீதியில் **UBS Kids Cup** போட்டிகளில் பங்குபெறுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வர்.